2014 ஜூலை 15]

140—

முந்திரித் தொழிற்சாலை

***29689—திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் பகுதியில் புதிய தொழில்நுட்ப வசதி கொண்ட முந்திரி உடைக்கும் கனரகத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் பகுதியில் முந்திரி உடைக்கும் வசதி கொண்ட புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய கனரகத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. தொழில் முனைவோர்கள் யாராவது முன்வந்தார்களென்றால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து டிட்கோமூலமாக அவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.*

திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்தைச் சுற்றி சுமார் 50 கிலோ மீட்டர் சுற்று வட்டப் பகுதியில், சுமார் 1 இலட்சம் ஏக்கருக்கு மேல் முந்திரி மரங்கள் பயிரிடப்படுகின்றன. முந்திரியிலிருந்து பல்வேறு பொருட்கள் பெறப்படுகின்றன. முந்திரிப் பழத்திலிருந்து பெறக்கூடிய முந்திரிச் சாறானது குளிர் பானங்கள், எசன்ஸ் போன்ற பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகின்றது. மேலும், முந்திரித் தோலிலிருந்து பெறப்படும் எண்ணெய்யானது பெயின்ட், தார், பிரேக் ஷூ போன்ற பொருட்களுக்கு*

முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுகிறது. மீதமுள்ள தோலின் சக்கையானதுகூட எரிபொருளாகப் பயன்படுகிறது. இதுமட்டுமல்லாமல், மத்திய அரசின் மண்டல முந்திரி ஆராய்ச்சி மையம் மற்றும் பல்கலைக்கழகம் விருத்தாசலத்தில் சிறப்பாகச் செயல்படுகின்றது. ஆகையால், சிறப்பு வாய்ந்த இந்த முந்திரித் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து விருத்தாசலத்தை மையமாகக் கொண்டு, மக்களின் பல ஆண்டுகால கோரிக்கையான நவீனத் தொழில்நுட்பத்தில் முந்திரிப் பழக்கூழ், முந்திரி உடைப்பு மற்றும் முந்திரி எண்ணெய் உள்ளடக்கிய கனரகத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மற்றும் அதனைச் சார்ந்த மாவட்டங்களாகிய தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களிலுள்ள விவசாயிகள் பலன் பெறும்வகையில் முந்திரிக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலத்தை டிட்கோவின் கூட்டுத் துறை நிறுவனமான திருவாளர்கள் சத்வா அக்ரோ எக்ஸ்போ பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம்மூலம் கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுகா, காட்டாண்டிகுப்பத்தில் 15 கோடி ரூபாய் முதலீட்டில் ஏற்படுத்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு இறுதியில் அந்தப் பணிகள் நிறைவு பெற்று உற்பத்தி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பொழுது விருத்தாசலத்தில் இருக்கின்ற அவர்களும் அதிலே பலன் பெறுகின்றவகையில் அந்தத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கின்றது.*

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதிக அளவிலே முந்திரி பயிர் செய்கின்ற காரணத்தினால் ஒரு தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதைத்தான் நானும் சொல்கின்றேன். யாராவது தொழில் முனைவோர்கள் முன்வந்தார்களென்று சொன்னால், டிட்கோ மூலமாக கூட்டு முயற்சியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பனந்தாள் மற்றும் திருவிடைமருதூர் ஒன்றியங்களில் 114 ஊராட்சிகளும், 5 பேரூராட்சிகளும் உள்ளன. இந்தத் தொகுதியானது நூற்றுக்கு நூறு விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய தொகுதி. விவசாயம் மூலமாக உற்பத்தியாகக்கூடிய நெல் உற்பத்தியில் கிடைக்கக்கூடிய வைக்கோல், கரும்பு உற்பத்தியில் கிடைக்கக்கூடிய கழிவுப் பொருளான சக்கை ஆகிய மூலப்பொருட்களும் என்னுடைய தொகுதியில் அதிகமாக கிடைக்கின்ற காரணத்தினால், என்னுடைய தொகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா? போதுமான அளவிற்கு இட வசதியும் இருக்கிறது. தடையில்லாத மின்சாரம் வழங்குவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கின்றார்கள். எனவே, மூலப்பொருட்கள் இருக்கின்றன, இட வசதியும் இருக்கிறது, தடையில்லாத மின்சாரத்தை அரசாங்கம் வழங்கியிருக்கிறது. நிதிச் சுமை இல்லாமலேயே திருவிடைமருதூரில் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி முந்திரி உடைக்கும் கனரகத் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் காகிதத் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல கரும்புச் சக்கை அளவு கிட்டத்தட்ட தினந்தோறும் 50 ஆயிரம் டன்னும், கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் லிட்டர் தண்ணீரும் தேவையிருக்கின்ற காரணத்தினால் யாராவது தொழில்முனைவோர்கள் முன்வருவார்களென்று சொன்னால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*